எனது இலக்கம்:ED/04/60/03/04/ නව ව්‍යවස්ථාව 2 වෙළුම SUB1
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
இசுருபாய,
பத்தரமுல்ல
2025 …............ மாதம்...............ம் திகதி

அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

**இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு மொழித் தேர்ச்சித் தேவையை பூர்த்தி செய்தல்**

2008.07.01ம் திகதி முதல் செயற்படும் இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22ம் திகதியுடைய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 9.1ம் பந்திக்கமைய, இலங்கை அதிபர் சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களும் ஆட்சேர்ப்பு தினத்திலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் இணைப்பு மொழியாகிய ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றுக் கொள்ள வேண்டும்.

02. அவ்வாறே, குறித்த சேவைப் பிரமாணக் குறிப்பின் 9.1ம் பந்திக்கமைய எவரேனும் ஒரு உத்தியோகத்தர் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருந்தால், அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இலக்கம் 08/2020 மற்றும் 2020.07.01ம் திகதி முதல் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் ஆங்கில மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய தேவையிலிருந்து விடுவிக்கப்படுவதுடன், ஏனைய உத்தியோகத்தர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பின் “ஈ” பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

03. இலக்கம் 2076/14 மற்றும் 2018.06.19 ம் திகதியுடைய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பின் இரண்டாம் திருத்தத்தின் 18 இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 9.1இன் கீழ் தரப்பட்டுள்ள இணைப்பு மொழித் தேர்ச்சிக்குரிய தேவையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

04. ஆகையால், இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22ம் திகதியுடைய இலங்கை அதிபர் சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தரங்களுக்கு பதவியுயர்வு பெற்றுக் கொள்வதற்காக இணைப்பு மொழித் தேர்ச்சிக்குரிய தேவை தவிர்த்து ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் குறித்த உத்தியோகத்தர்களது தரங்களுக்கான பதவி உயர்வு தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

05. இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதி முதல் மூன்று (03) வருடங்களுக்குள் இணைப்பு மொழித் தேர்ச்சிக்குரிய தேவையை பூர்த்தி செய்யத் தவறும், இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22ம் திகதியுடைய இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களது மூன்றாவது சம்பள ஏற்றம் முதல்

வருடாந்த சம்பள ஏற்றங்கள், உரிய தகைமைகளை பூர்த்தி செய்யும் திகதி வரையில் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும்.

06. அவ்வாறே, மேலே 05ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பள ஏற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தமது தரம் II இற்கு பதவி உயர்வுக்குரிய திகதிக்கு, உரிய இணைப்பு மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளத் தவறும் பட்சத்தில், குறித்த பதவியுயர்வைப் பெற்றுக் கொள்வதற்குரிய திகதி முதல் தாமதிக்கும் காலப் பகுதிக்கு சமமான காலத்திற்கு பதவியுயர்வினைத் தாமதப்படுத்த நடவடிக்கையெடுக்கப்படும்.

07. இச் சுற்றுநிருபமானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் வெளியிடப்படுகின்றது.

08. இச் சுற்றுநிருபமானது மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன், மொழிகளுக்கிடையே பொருத்தப்பாடின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்திற்கமைய செயற்படல் வேண்டும்.

நாலக களுவெவ
செயலாளர்